www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

188

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

மட்டக்களப்பில் ஆரம்பமான இரண்டாம் கட்ட ஈழப்போர் வடக்கு-கிழக்கு எங்கும் பரவியது.

வடக்கு-கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் பல புலிகளால் முற்றுகையிடப்பட்டு அங்கிருந்த பொலிசார் அனைவரும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டனர்.

பொலிஸ், இராணுவத்தில் பணிபுரியும் அனைவரும் தம்மிடம் சரணடைய வேண்டும் என்று மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட புலிகளின் தளபதி கருணா அறிவித்தார்.

அந்த அறிவிப்புடன் கிழக்கில் புலிகளால் பிடிக்கப்பட்ட பொலிசாரில், ஜிகாத் அமைப்பில் இருந்தவர்கள் என்று தம்மால் சந்தேகிக்கப்பட்ட அனைவரையும் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

'ஜிகாத்' அமைப்பில் இருந்ததாக புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட முஸ்லிம் பொலிசாரில், அந்த அமைப்பைச் சேராதவர்களும் இருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் கிழக்கில் பொலிஸ் நிலையங்களை தாக்கியபோது முஸ்லிம் பொலிசாரை தனியாக பிரித்தெடுத்து சுட்டுத்தள்ளினார்கள்.

மாகாணசபைக் காலத்திலேயே அச்சம்பவம் நடைபெற்றிருந்தது.

அச் சம்பவம் தொடர்பாக மாகாண சபை முதல்வர் வரதராஜப் பெருமாள் கண்ணீர் விட்டதாகவும், "என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை, என் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விதத்தில் நடந்துவிட்டது!" என்று கூறியதாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பின்னர் நினைவு கூர்ந்திருந்தார்.

அதேபோலவே புலிகளும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தம்மால் பிடிக்கப்பட்ட பொலிசாரில் முஸ்லிம் பொலிசாரை சுட்டுக் கொன்றனர்.

புலிகள் முஸ்லிம் பொலிசாரை கொலை செய்ததை ஈ.பி.ஆர்.எல்.எஃப். கண்டித்தபோது "நீங்கள் செய்ததை மறந்துவிட்டீர்கள். இவற்றைக் கண்டிக்கும் தார்மீகத் தகுதி உங்களுக்கு கிடையாது!" என்று ஈரோஸ் பாலகுமார் கூறியிருந்தார்.

ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் முஸ்லிம் பொலிசாரை புலிகள் சுட்டுக் கொன்றதை கண்டித்தன.

### புலிகள் அறிக்கை

14.06.90 அன்று விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

இலங்கை அரசுடன் பேச்சு முறிந்ததுக்கான காரணத்தை விளக்கும் விதமாக அந்த அறிக்கை வெளியானது.

"தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவும் அன்றி வேறல்ல.

தமிழீழ விடுதலைக்காகவும், சிங்கள, இந்திய ஆயுதப் படைகளின் தாக்குதல்களில் இருந்தும், சமூக விரோத, இனத்துரோகக் கும்பல்களின் துன்புறுத்தல்களில் இருந்தும் தமிழ் பேசும் மக்களைக் காப்பதற்காக இதுவரை ஆயிரத்தி ஐநூறுக்கும் மேற்பட்ட வீரர்கள் தமது இன்னுயிரை ஈந்துள்ளனர். ஏராளமானோர் கைகால்களை இழந்துள்ளனர்.

இரண்டரை ஆண்டு காலமாக தமிழீழ மக்களுக்கு சொல்லொண்ணா கொடுமைகளை இழைத்து தமிழீழ விடுதலைப் போரை ஒடுக்க நினைத்த இந்தியப் படையினரை, இந்த மண்ணைவிட்டு விரட்டியடிக்க, நிபந்தனையற்ற பேச்சுக்கு சிறீலங்கா அரசு அழைத்தது.

எமது இலட்சியத்திற்கு எவ்வித ஊறும் நேராத வகையில், எதுவித விட்டுக்கொடுப்பும் அற்ற நிலையில், சிறீலங்கா அரசுடன் யுத்த நிறுத்தம் செய்து பேச்சுவார்த்தை நடத்த முடிவெடுத்தோம்.

தமிழ் மக்களின் மீது பகைமை உணர்வுள்ள இராணுவம் தமிழ்ப் பகுதிகளில் இருப்பதில் பயனில்லை என்பதையும், அவர்களால் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னலும், இடையூறும்தான் தொடரும் என்பதையும் பேச்சுவார்த்தைகளின்போது தொடர்ந்து இடித்துரைத்தோம்.

இந்தியப் படையை எப்படியாவது வெளியேற்றியே தீர வேண்டும் என்ற நெருக்கடி நிலையில், தமிழீழப் பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரை முற்றாக திருப்பி அழைப்பதற்கும், தமிழீழத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையையும் முகாம்களையும் குறைப்பதற்கும் சிறீலங்கா அரசு ஒப்புக்கொண்டது. சில பகுதிகளில் இருந்து சிங்களப் பொலிசாரையும் திரும்பப் பெற்றது.

ஆனால், இந்தியப் படை இங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் சிறீலங்கா அரசுதான் ஒப்புக்கொண்டபடி செயற்படாதது மட்டுமல்ல, மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினரைக் கொண்டு வந்து குவிக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது.

### வாக்குறுதி மீறல்

எமக்கும் சிறீலங்கா படைகளுக்கும் இடையே கடந்த நான்கு நாட்களாக கிழக்கில் நடைபெற்றுவரும் சமர் எம்மால் வலிந்து தொடுக்கப்பட்ட ஒன்றல்ல.

## பொலிஸ் நிலையங்கள் கட்டுப்பாட்டில்



கொடுத்த வாக்குறுதிகளை மீறி சிறீலங்கா ஆட்சியாளரினால் தமிழீழத்தில் திணித்து வைக்கப்பட்டிருந்த சிறீலங்கா பொலிசாரின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்களினாலும், புலிகளின் செயற்பாடுகளுக்கு அவர்கள் இடையூறு விளைவித்தமையாலும் ஏற்பட்டது.

கடந்த 12.06.90 அன்று யுத்த நிறுத்தத்தை கொண்டு வருவது பற்றி எம்மோடு பேச்சுவார்த்தை நடத்த நீதி அமைச்சர் ஹமீத்தை சிறீலங்கா அரசு அனுப்பிவைத்தது.

அதேவேளையில் நாடாளுமன்றத்தில் இன்னொரு அமைச்சர் புலிகளை கிரிமினல்கள் என்று இழித்துரைத்தும், இனத்துரோகியான வரதராஜப் பெருமாளுடன் எமது தலைவரை ஒப்பிட்டும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அதையும் பொருட்படுத்தாமல் ஹமீட்டுடன் பேச முடிவு செய்து நேரமும் குறித்தோம்.

ஆனால் சிறீலங்கா அரசோ அதன்பின் குறிப்பிட்ட நேரத்தில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு பதிலாக, யுத்தத்தை தொடர்வதற்கும், அதனை விரிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளில் வேகமாக இறங்கியது.

முப்படைகளையும் ஏவிவிட்டு ஆகாய, கடல், தரைமார்க்கமாக சிறீலங்கா அரசு தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகிறது.

### வெட்டிக் கொலை

குடிமக்கள் செறிவான பகுதிகளில் விமான, செல் தாக்குதல்களினால் பொதுமக்களுக்கு பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

அம்பாறையில் பல பகுதிகளில் முகாம்களை விட்டு வெளியேறிய சிங்கள ஆயுதப் படையினர் தமிழ், முஸ்லிம் பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியுள்ளனர். நூற்றுக்கும் அதிகமான மக்களை வெட்டிக் கொன்றுள்ளனர்.

மேலும் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆயுதப்படையினரை கொழும்பில் இருந்து சிறீலங்கா அரசு கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழீழ மக்கள்மீது பெரும் தாக்குதலை நடத்திவரும் சிறீலங்கா அரசின் ஆயுதப்படையினருக்கு எதிராக நடைபெற்ற நான்கு நாள் மோதல்களில் எமது 45 வீரர்கள் களப்பலியாகியுள்ளனர்.

தமிழீழ மக்களின் விடுதலைக்கான வேள்வித்தீயில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட, அந்த 45 வீரர்களுக்கும் எமது வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

தமிழீழ மக்களுக்காக நாம் நடத்திவரும் போரில் தமிழீழ மக்கள் அனைவரும் பங்காளிகளாக மாறி களத்தில் நிற்கும் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

புலிகளை நாடாளுமன்றத்தில் சாடியவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன.

அரசுடன் புலிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோது பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடந்தது.

அமைச்சரவைப் பேச்சாளராக ரஞ்சன் விஜயரத்னாவே அப்போது செயற்பட்டு வந்தார்.

கேள்விகளுக்கு சூடாகவும் சில சமயம் குறும்பாகவும் பதில் கூறி பரபரப்பு ஏற்படுத்துபவர் ரஞ்சன்.

புலிகள் வடக்கு-கிழக்கில் நிதி திரட்டல் நடத்துவது தொடர்பாக நிருபர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

ரஞ்சன் அதற்கு கூறிய பதில்: "புலிகளுக்கு பசித்தால் புல்லையா தின்னச் சொல்கிறீர்கள்?"

இன்னொருமுறை பத்திரிகையாளர் ஒருவரது கேள்வியால் பொறுமை இழந்த ரஞ்சன், "உம்மை சிறையில் தள்ள வேண்டி வரும்" என்று எச்சரிக்க, அது பெரும் பிரச்சனையாகிவிட்டது.

## போர் ஏன்? —புலிகளின் விளக்கம்



அதற்கு அடுத்த தடவை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டுக்கு புதிய பத்திரிகை ஒன்றுடன் வந்தார் ரஞ்சன்.

அந்த பத்திரிகையை மாநாட்டில் விநியோகித்துவிட்டு, "நானும் பத்திரிகையாளன் ஆகிவிட்டேன்" என்று கூறினார்.

ரஞ்சனுக்கு அவரது எதிரிகள் சூட்டியிருந்த பட்டம்: 'விசர்ப் பூனை.'

### எதிர்க்கட்சிகள் அறிக்கை

அரசு, புலிகள் பேச்சு எப்போது முறியும் என்று வழிமேல் விழிவைத்து காத்திருந்தன எதிர்க்கட்சிகள்.

முறிந்தது என்றதும் உள்ளே எழுந்த மகிழ்ச்சியை வெளிக்கு காட்டாமல், நாட்டு நலன் மேல் அளவற்ற அக்கறைபோல கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோசலிச முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ரெலோ, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே கூட்டாக அறிக்கைவிட்டன.

'புலிகளை வெற்றி கொள்ளத்தக்க சந்தர்ப்பத்தை தவறவிட்ட அரசாங்கமே இன்றைய நிலைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்' என்று அறிக்கையில் கூறப்பட்டது.

அதற்கு பதில் கொடுத்து அரசும் அறிக்கை வெளியிட்டது.

'இன்று, ஒரே தேசம், ஒரே மக்களாக செயற்பட வருமாறு எதிர்க்கட்சியை ஜனாதிபதி சந்திரிக்கா அழைத்துக் கொண்டிருக்கிறார்.

அன்று, ஒரே தேசிய இனமாக செயற்பட வேண்டும் என்று பிரேமதாசா அரசு எதிர்க்கட்சிகளை நோக்கி அழைப்பு விடுத்திருந்தது.

இதற்கிடையே பாராளுமன்றத்தில் அவசர கால சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் கே.பி. இரத்நாயக்கா அமைச்சர் ஹமீட்டுக்காக பிரார்த்தனை செய்தார்.

'நெருக்கடியான இந்த நிலையில் யாழ்ப்பாணம் சென்றுள்ள அமைச்சர் ஹமீட் எந்தவிதமான பாதிப்பும் இன்றி நலமுடன் திரும்பிவர அல்லாஹ்வின் பெயரால் பிரார்த்தனை செய்கிறேன்!' என்றார்.

கே.பி. இரத்நாயக்காவுக்கு தமிழ் தெரியும். யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி கற்றவர். இப்போது சபாநாயகராக இருக்கிறார்.

தமிழில் உள்ள ஒரு பழமொழியையும் அன்று சபையில் கூறினார்: "குட்டக் குட்ட குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்." அது இன்று புலிகளுக்கும் அரசுக்கும் பொருந்துகிறது' என்று கூறினார்.

### தர்ம யுத்தம்

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ரெலோ இயக்கத்தின் அன்றைய செயலதிபரும், பா.உ.வுமான ஜி. கருணாகரன் (ஜனா) அரசுக்கு முழு ஆதரவு தெரிவித்தார்.

"பயங்கரவாதிகள் ஜனநாயக ஆட்சி முறைக்கு சவால் விட்டுள்ளனர்.

இரத்தவெறி கொண்ட இவர்களுக்கு எதிரான போராட்டத்தில் நாம் ஒத்துழைக்க தயார். எமது நாட்டுக்காக எமது மக்களுக்காக நாம் எதனையும் செய்யத் தயார்.

இந்த தர்ம யுத்தத்தில் அரசு வெற்றி பெறுவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரர்கள் பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்குவோம்" என்று கூறினார்.

### ஈரோஸ் வெளியேற்றம்

போர் மூண்டபின்னர் ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

'போர் மூளுமானால் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுவோம்' என்று பிரபாகரனுக்கு கொடுத்த உத்தரவாதத்தை நிறைவேற்றினார் பாலகுமார்.

பாராளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை முன்வைத்துவிட்டு வெளியேறுமாறு வன்னியில் இருந்து பாலகுமார் தகவல் அனுப்பினார்.

அவ்வாறு செய்த ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலும் கொழும்பில் ஈரோஸ் அலுவலகத்தில் நிற்பது ஆபத்து என்பதால் அங்கு நிற்காமல் நழுவிவிட்டனர்.

அன்றிரவே ஈரோஸின் கொழும்பு அலுவலகம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட ஆயுதங்களை திரும்ப ஒப்படைக்குமாறு கேட்டனர்.

ஆயுதங்களை மீளப் பெற்றதோடு, நாடாளுமன்ற உறுப்பினர்களது பாதுகாப்புக்கு என்று இருந்தவர்களையும் அழைத்துச் சென்று விட்டனர்.

சங்கர்ராஜி, சுதா மாஸ்டர் ஆகியோர் தமக்கும் பாலகுமார் ஆட்களுக்கும் பிரச்சனை என்றும், அவர்களது முடிவை தாம் ஏற்கவில்லை என்றும் அரசுக்கு தெரிவித்தனர்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சனை சுதா மாஸ்டர் சந்தித்தார்.

"பாலகுமாரின் முடிவு ஈரோசின் முடிவல்ல என்று பகிரங்கமாக அறிக்கைவிட வேண்டும். அதன்பின்னர்தான் மேற்கொண்டு பேசலாம்" என்று கூறிவிட்டார் ரஞ்சன்.

அவ்வாறே பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்று கொடுக்கப்பட்டது.

ஆனால் ஈரோசின் பெரும்பாலான உறுப்பினர்கள் பலர் பாலகுமாரின் முடிவை ஏற்றனர். வேறு பலர் ஒதுங்கி நின்றனர்.

### மோதல் தீவிரம்

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய சூட்டோடு சூடாக் படையினர் ஷெல் வீச்சில் ஈடுபடத் தொடங்கினர்.

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து சரமாரியாக கிராமங்களை நோக்கி ஏவப்பட்ட ஷெல் வீச்சால் பொதுமக்கள் இடம்பெயர்ந்தனர்.

திருமலை மாவட்டம் கிண்ணியா இராணுவ முகாம்மீது 13.06.90 அன்று பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை புலிகள் நடத்திய தாக்குதலில் பத்து படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் இருவர் பலியாகினர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் முன்பாக இருந்த இராணுவ முகாம் மீது 14.06.90 அன்று பாரிய தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுத்தனர்.

பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார் புலிகளிடம் சரணடைந்தனர். இதேபோல மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமை யாற்றிய பொலிசாரும் புலிகளிடம் சரணடைந்தனர்.

வவுனியா பொலிஸ் நிலையங்கள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன. அங்கும் பொலிசார் சரணடைந்தனர்.

புலிகளை எதிர்த்து சண்டையிடும் ஆட்பலமோ, ஆயுதபலமோ பொலிசாரிடம் இருக்கவில்லை.

வடக்கில் ரயில் பாதைகளும் புலிகளினால் தகர்த்தெறியப்பட்டன. இதனை அடுத்து யாழ்தேவி ரயில் அநுராதபுரத்துடன் தனது சேவையை நிறுத்திக் கொண்டது.

எவ்வளவு விரைவாக முந்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு விரைவாக முந்திக் கொண்டு முகாம்களை தாக்குவதில் புலிகள் இறங்கினர்.

இதற்கிடையே அரசுதான் பொலிசாரை புலிகளிடம் சரணடையச் சொன்னதாக எதிர்க்கட்சியினர் கூறினார்கள்.

உண்மையில் புலிகள் பேச்சு முறிந்ததும் அசுரவேகத்தில் செயற்பட்டு சகல பொலிஸ் நிலையங்களையும் முற்றுகையிடுவர் என்று அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

இனிப் பேச்சுக்கே இடமில்லை என்று யுத்தப் பிரகடனம் செய்வர் என்பதையும் அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை.

மேலும் சில மாதங்கள் சென்றபின்னர்தான் முழுமையான சமர் வெடிக்கும். அதற்குள் தம்மை தயார்படுத்திக் கொள்ளலாம் என்றே அரசாங்கம் நினைத்தது.

ஆனால் புலிகள் முந்திக் கொண்டனர்.

முந்திக் கொண்டதோடு நுட்பமான போர்த்திட்டங்களும் வகுக்கப்பட்டன.

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்